**உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசரகால உதவி செயற்திட்டம் - 2023**

---

உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசரகால உதவி செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2022 செப்தெம்பர் 09 ஆம் திகதிய 4205-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 9229-எஸ்ஆர்ஜ (ஈஎவ்) ஆம் இலக்க மானிய உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களம், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சு, விவசாய அமைச்சு, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் விவசாய திணைக்களம் என்பன அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதும், நாடு முழுவதும் உள்ள ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதும் இச்செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஏழை மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடி நிதி உதவி வழங்கல் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கம் மற்றும் விவசாய அபிவிருத்தி திணைக்களம் போன்றவற்றின் சமூக பாதகாப்பு முறைமையின் ஏழை மற்றும் பாதிக்கப்பட்வர்களின் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உதவியினை வழங்கல் செயற்திட்ட நடவடிக்கையாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 74,090.15 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 203.36 மில்லியனானதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2022 செப்தெம்பர் 09 இல் தொடங்கியிருந்ததுடன் 2024 ஆகஸ்ட் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்றிட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிச் செயலாற்றல்

## 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி முன்னேற்றம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 8,577,500,000 மொத்தம் செயற்திட்டத்தின் வேலைகளை முடிப்பதற்கு 03 செலவீன விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டதுடன் மொத்தம் ரூபா 7,118,648,822 மொத்தம் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டது. இந்த மாற்றல்களால், செயற்திட்டதின் செலவீன விடயங்களின் கீழ் ரூபா 4,207,602,965 மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட ஏனைய செயற்திட்டங்களிற்காக ரூபா 2,911,045,856 மொத்த தொகை மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆகையால் உண்மையான பாதீட்டு மதிப்பீடுகள் மீளாய்வாண்டில் செயற்திட்ட வேலைகளின் நிறைவேற்றலிற்காக தயாரிக்கப்பட்டிருந்தது. | விவசாயிகள் மற்றும் அதிகுறைந்த வருமானம் பெறும் குடும்பத்தின் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குவதற்கும் தகவல் முறைமைகளான சீஆர்எம் மற்றும் ஜோகோவியா போன்றவற்றின் முன்னேற்றத்திற்காகவும் 2023 ஆம் அண்டு பாதீடு மதிப்பீட்டில் ரூபா 8,577.50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.<br><br>ரூபா 1,424,062,928 தொகையான விவசாயிகளின் வாழ்வாதார அபிவிருத்திக்கான செலவீனம் அந்த வாக்கின் கீழ் கணக்கிடப்படடிருந்தது. 2022 ஆம் ஆண்டில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான மானிய ஏற்பாடு அமுல்படுத்துவதற்கு எதிபார்க்கப்பட்டது 2023 இல் பூர்த்தியாக்கப்பட்டு அமுல்படுத்த முடிந்திருக்கவில்லையென்பதுடன் அவ் ஒதுக்கீடு ரூபா 1,533,200,000 அதே உருப்படி குறியீட்டிற்கு மாற்றப்படடிருந்தது. அரச கொள்கை தீர்மான அடிப்படையில் ''அஸ்வெசும்'' நிகழ்ச்சி திட்டத்திற்கு 2023 யூலையிலிருந்து சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் மாற்றப்பட்டிருந்ததுடன் அமுல்படுத்தலின் நிர்வாக கட்டமைப்பு மாற்றமடைந்தது.<br><br>''அஸ்வெசும்'' நிகழ்ச்சி திட்டத்தின் கீழான நலன் பிரிவு புதிய முறைமையுடன் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க வலுப்படுத்தலிற்கான நலனாளிகைகளை தெரிவு செய்தல் இக் காரணத்ததால் தாமதமடைந்ததுடன் அதன் விளைவால், சமுர்த்தி | செயற்திட்ட நோக்கங்களை வினைத்திறனாக அடைவதற்கு, பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து ஏற்பாடு சரியான முறையில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நலனாளிகளின்கான வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2023 யூலையிலிருந்து மேற்காள்ளப்பட்டிருக்கவில்லையெ யன்பதுடன் இதற்கான ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டை சேமிக்கின்றது. இந்த நிகழ்ச்சியானது செயற்திட்ட குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ளதுடன் தற்போதளவில் அமைச்சரவையின் அங்கீகாரம் ‘‘அசுவெசும’’ நிகழ்ச்சி திட்டத்திற்காக பெறப்பட்டிருந்தது.<br><br>மேலும் சரியான விடயக் குறியீட்டின் கீழ் இந்தச் செயற்திட்டத்துடன் தொடர்புடைய செலவீனத்தை கணக்கிடுவதற்கு அதே செயற்திட்டத்தின் கீழ் நிதிப் பிரமாணம் 66 இன் கீழ் செயற்திட்டத்திற்குள் மாற்றப்பட்டிருந்தது. அதற்கு பின்னர், மிகுதி ஒதுக்கீடு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு வேறு உப செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டதுடன் அரச வளங்களை வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதை இலக்காக கொண்டுள்ளது. | |
| (ஆ) | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்ததால் ஏற்படுத்தப்பட்ட உண்மையான செலவினமானது உரிய வருடத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக ரூபா 3,030,998,302 கூட்டப்பட்ட தொகை மீளாய்வாண்டின் போது திருத்தப்பட்டது. | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் 2022 ஆம் ஆண்டிற்குரிய செலவீனத்தை நிரூபிப்பத்தன் பின்னர் தேசிய திட்டமிடல் திணைக்களம் 2022 ஆம் அண்டிற்குரிய தொடர்புடையை செலவீனத்தை கணக்கிட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவுறுத்தல் செயல்முறையில் 2022 ஆம் ஆண்டிற்குரிய செலவீனம் டீஎஸ்டீ ஆல் திருத்தப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் டீஎஸ்டீ ஆல் நிரூபிக்கப்பட்ட செலவினங்களின் திருத்தியமைத்ததால் மீளாய்வாண்டு நிதிக் கூற்றல் திருத்தியமைக்கப்பட்டு 2022 | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட வேண்டிய உண்மையான செலவீனம் உரிய வருட நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆம் ஆண்டுடன் தொடர்புடைய செலவீனம் திருத்தியமைக்கப்பட்டது. | |
| (இ) | விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் அறிக்கைகளின் பிரகாரம் 2022 திசெம்பர் மாத காலப்பகுதியிலிருந்து 2023 யூன் வரைக்கும் செலுத்தப்பட்'ட ரூபா 7,424,062,928 நிதியுதவி 1,039,961 விவசாயிகளுக்கு செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் அறிக்கைகளின் பிரகாரம் 1,035,218 விவசாயிகளுக்கு மாத்திரம் மானியங்கள் கொடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க 4,743 பற்றாக்குறை அவதானிக்கபப்ட்டது. | கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு, விவசாயிகளின் எண்ணிக்கையில் வித்தியாசமிருந்ததுடன் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் (டீஏடீ) பிரதம நிதி உத்தியோகத்தர் டீஏடீ யின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தனர். தேவையான தகவல்கள் நாங்கள் பெற்றதுடன் நாங்கள் எதிர்காலத்தில் தெரிவிப்போம். | சரியான இலக்கங்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கபட வேண்டும். |

## 2.2 நிதியங்களின் பயன்பாடு

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இச் செயற்திட்த்திறகாக ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்கிய ஐ.அ.டொலர் 200 மில்லியன் கடன் தொகைக்கு மேலதிகமாக, ஆசிய அபிவிருத்தி வங்கியின் மூலம் ஜேஎவ்பீஆர் உரிய செய்றதிட்ட நடவடிக்கைகளுக்கு நிதியளிப்பதற்காக ஐ.அ.டொரல் 3 மில்லியன் மானியத்தை வழங்குவதற்கு இணங்கியிருந்தது. அந்த மானியத்தில் 2023 ஆம் ஆண்டில் ரூபா 68.36 மில்லியன் அல்லது ஐ.அ.டொலர் 0.1902 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும் ஐ.அ.டொலர் 0.09 மில்லியன் அல்லது ரூபா 33.57 மில்லியன் அல்லது மதிக்கப்பட்ட கிரயத்தின் 47 சதவீதம் 2023 ஆம் ஆண்டில் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | --- | குறித்துரைத்தவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கும் ஒதுக்கப்பட்ட மானியத்தை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வெளிவாரி வளங்கள் திணைக்களத்தின் அரசகடன் கணக்கீட்டு முறைமையின் பிரகாரம், நிதியங்களை பயன்படுத்தாமையால் 2024 மார்ச் 15 இல் உள்ளவாறு கடனாளிக்கும் முகவருக்கு ரூபா 15,105,802 இற்கு சமனான ஐ.அ.டொலர் 45,801.27 இற்கு சமனானவை கடப்பாட்டு கட்டணங்களாக செலுத்தப்பட்டிருந்தது. | இணங்கப்பட்டது. | மொத்த ஒதுக்கப்பட்ட நிதியங்களை முறையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 3.1 | ஏடீபியின் கடன் ஐ.அ.டொலர் 2.65 மில்லியன் அல்லது ரூபா 965.47 மில்லியன் (டீஎஸ்டீ இல் சீஆர்எம் மற்றும் டாட் இல் ஜோகோவியா) வினைத்திறன் மற்றும் சமூக பாதுகாப்பு முறைமைகளின் வினைத்திறமையுடன் முன்னேற்றுவதற்காக எந்தவொரு பயன்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | டீஎஸ்டீ மற்றும் விவசாய அபிவிருத்தி திணைக்களத்தின் சீஆர்எம் முறைமையை இந்த செயற்திட்டத்தினன் கீழ் முன்னேற்றுவதற்கு பிரேரணை செய்யப்பட்டது. இந்த முறைமைகளை முன்னேற்றுவதற்கு முன்னர் தற்போதைய முன்னேற்றத்திற்காக ஆலோசனைகளை பிரேரணை செய்வதற்கும் தீர்மானக்கப்பட்டது. அதற்கிணங்க கற்கைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் அமுல்படுத்தும் முகவராண்மைகள் முன்னேற்றுவதற்காக செயற்திட்ட பிரேரணைகளை சமர்ப்பிப்பதற்காக முன்னர் தற்போதுள்ள முறைமைகளினை மதிப்படுவதற்கும் முறை தீர்மானிக்கப்ட்டிருந்தது. அதற்கிணங்க உரிய முறைமைகள் முன்னேற்றங்கள் செயற்திட்ட காலப்பகுதியிலுள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | குறித்தவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கும் ஒதுக்கப்பட்ட நிதியை அதிகபட்சமபக பயன்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| 3.2 | (அ) ஏடீபி மானியம்<br>ரூபா 695,394,000 மதிப்பபிட்ப்பட்ட கிரயத்தில் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சின் கீழ் (மகளிர், சிறுவர், மாற்றுத் திறனாளிகள்) போன்ற தொண்டர்களிற்காக அவசர உதவிக்காக மானியத்தின் கீழான வேலைகள் தொடர்பில் 2024 மார்ச 15 இல் உள்ளவாறு செயல் நடவடிக்கைத் திட்டத்தின் செயன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மதிப்பீட்டின் ரூபா 182,271,606 அல்லத 27 சதவீத மாத்திரம் நிதி முன்னேற்றம் இருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டது. | -மேற்பட்டவாறு- |
| (ii) 05 பிரதான நடவடிக்கைகளுடன் தொடர்புடைய 12 உப நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கௌள்ளப்பட்டது. மூல செயல் நடவடிக்கை திட்டத்திலுள்ள சில நடவடிக்கைகளில் சில பெண்கள், சிறுவர் அலுவலர்கள் மற்றும் சமூக வலப்படுத்தல் அமைச்சால் நிறுத்தப்பட்டிருந்ததுடன் (முடிக்கப்பட்டது) புதிய நடவடிக்கைகள் இனங்காணப்பட்டதுடன் செயல் நடவடிக்கை திட்டம் சீரமைக்கப்பட்டது. இந்த சீரமைக்கப்பட்ட திட்டமானது 2024.03.22 ஆம் திகதிய என்பீ/ஏடீபீ/01/2022/ எம்ஓடபிள்யூசிஎஸ் கடிதத்தினூடாக இந்த திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தது. | -மேற்பட்டவாறு- |
| (iii)08 பிரதான நடவடிக்கைக்களுடன் தொடர்புடைய 24 உப நடவடிக்கைகள் தொடர்பில் எந்த வித செயன்முன்னேற்றமிருக்கவில்லை. | சீரமைக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் எதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகள் அமல்படுத்தப்படும். | -மேற்பட்டவாறு- |
| (ஆ)மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு விவசாய ஆலோசனை சேவை தொடர்பில் ஐஅ.டொலர் 0.06 மில்லியன் அல்லது ரூபா 21.86 மில்லியன் ஏற்பாட்டிற்காக எந்த செயன்முன்னேற்றமிருக்கவில்லை. | ஏதிர்காலத்தில் இந்த நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | -மேற்பட்டவாறு- |
| (இ) விவசாய கவனயீர்ப்பு மற்றும் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் (ஹப்) 2023/2024 ஆம் ஆண்டிற்கான மானியங்களின் ஐ.அ.டொலர் 0.25 மில்லியன் அல்லது ரூபா 91.08 மில்லியனை ஒதுக்கீடு செய்தது. எனினும் ரூபா 57,353 மாத்திரம் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது | ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கைகள் தற்போது இடம் பெறுவதுடன் செயற்திட்ட காலப் பகுதியில் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்பட்டது. | -மேற்பட்டவாறு- |